# கண்டியூர், ஸ்ரீ பிரமசிரகண்டீசர் (ஸ்ரீ வீரட்டேச்வரர்) ஆலயத் தல வரலாறு.



ராஜகோபுரம்

T12800
R003L04
T. 12800

தேவஸ்தான வெளியீடு—1958

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

"ஆதிவில்வாரண்யம்" "கண்டனபுரம்"

என வழங்கும்

திருக்கண்டியூர் ஸ்ரீ பிரமசிரக்கண்டீசர்

என்கிற

# ஸ்ரீ வீரட்டேச்வரர் ஆலயத் தல வரலாறு.

எழுதியவர் :

பண்டித, சிரோமணி

ஸ்ரீ A. S. ரங்கநாதாச்சாரியார்

தஞ்சை

(Writer of Guide Books for Temples and Religious Lecturer, H. R. & C. E.)

★

வெளியிடுவோர்

ஸ்ரீ பிரமசிரக்கண்டீஸ்வரர் தேவஸ்தானம்,

கண்டியூர், தஞ்சை ஜில்லா.

1958

உரிமை தேவஸ்தானத்துடையது ] ★

[விலை ஆறு அணா.

# பதிப்புரை.

இந்த ஸ்ரீ பிரமசிரக்கண்டீசர் ஆலயம், மிகப்புனிதமான பாடல்பெற்ற பல ஆலயங்களுள் ஒன்ருகத் திகழ்வதுடன் மற்றும் பல சிறப்புகளையும் பெற்றுமிளிர்கிறது. இத்தல விவரங்களைப் பொதுமக்கள் அறிவது அவசியமெனக்கருதிய, சென்னை அறநிலயப் பாதுகாப்பிலாகாவினரின் ஆணையின் வண்ணம் இத்தல வரலாற்றினை எழுதி வெளியிட முன் வந்தோம்.

அறநிலய இலாகா சமயப் பிரசாரகரும், பன்மொழி வல்லுநரும், திருப்பணித் தொண்டருமான தஞ்சை பண்டித சிரோமணி **ஸ்ரீ A. S. ரெங்கநாதாச்சாரியார்** அவர்கள் இப்பணியை ஏற்று பல பழைய நூல்களையும், கல்வெட்டுகளை யும் ஆராய்ந்து, இன்றைய உலக நிலக்கேற்ப ரத்னச்சுருக்க மாக எழுதிக்கொடுத்துதவியதுடன், தேவையான படங்களைப் பிடிக்கும் பணியிலும், அழகாக அச்சிடும் தொண்டிலும் உடனிருந்து உதவினுர்கள், அவர்களுக்கும் படங்களை எடுத் துதவிய அய்யம்பேட்டை "ஸ்ரீ கிரி ஸ்டூடியோ" வினருக்கும், விரைவில் அச்சடித்துக் கொடுத்த தஞ்சை ஸ்ரீ வெற்றிவேல் பிரஸினருக்கும் எமது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேம்,

இங்ஙனம்,

**K. R. கல்யாணசுந்தர முதலியார்,**
நிர்வாஹ அதிகாரி

**T. துரையா பாண்ட்ருயர்,**
டிரஸ்டி
மிராசுதார், கண்டியூர்

ஸ்ரீ பிரமசிரக்கண்டீச்வரர் தேவஸ்தானம், கண்டியூர்

*21—2—59,*

'ஆதிவில்வாரண்யம்'

என்றபெயர்வரக் காரணமாகவிருந்த

வில்வமரம்.



(ஸ்தல விருக்ஷம்)

# முகவுரை.

"'தென்னாடுடைய சிவனே போற்றி'' என்று போற்றப் படும் சிவபெருமான், எங்கும் நிறைந்திருப்பினும், தென்னாட்டில் அதிகச் சிறப்புடன் ஆங்காங்கு கோயில் கொண்டெழுந்தருளி அருள் வீசி வருவது உலகறிந்ததே.

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற முச்சிறப்பும் பெற்றதும், முனிவர், மன்னவர்களால் வழிபடப் பெற்றதும், சிவநேசச் செல்வர்களான நாயன்மார்களால் போற்றிப் பதிகம் பாடப் பெற்றதுமான திருத்தலங்கள் தமிழகத்தில் பலஉள. அவற்றுள், சோழநாட்டில் காவிரியின் தென்கரையில் 127 தலங்களும், வடகரையில் 63 திருத்தலங்களும் இருக்கின்றன. காவிரித்தென்கரைத் தலங்களுள் 12வதாக அமைந்துள்ளது 'கண்டனபுரம்' என்கிற கண்டியூர். இதனை "ஆதிவில்வாரண்யம்'' என்றும் கூறுவர். இது, சிவபெருமான் தனது வீரத்தை உலகிற்கு வெளிக்காட்டிய எட்டு வீரட்டத் தலங்களுள் முதன்மையாகக் கருதப்படுகிறது. இறைவன் சூரிய பூஜை பெறும் தலங்களுள் இதுவும் ஒன்று. 'பூலோககைலாய' மெனப்படும், திருவையார் ஸப்தஸ்தான ஸ்தலங்களுள் இது 5வதாகும். மும்மூர்த்திகளையும் தன்னகத்தே கொண்டபதி. அப்பரடிகள், திருஞானசம்பந்தப் பெருமான் ஆகியோர்களது பதிகம் பெற்ற சிறப்புடையதுடன், சுந்தரமூர்த்தி ஸ்வாமிகளால் திருநாட்டுத்தொகையில் குறிப்பிடப்பட்டுள்ளது இத்தலம். இத்தல முருகனை ஸ்ரீ அருணகிரியார் போற்றியுள்ளார். 'கடுவாய்' எனப்படும் குடமுருட்டியின் தென்பால் அமைந்துள்ள இவ்வீரட்டேச்வரர் ஆலயச் சிறப்பினை, புதுமுறையில் யாத்ரீகர்கட்கும், அடியார்கட்கும் பயனூட்டும் முறையில் பல படங்களுடன் வெளியிடவேண்டுமென்ற அறநிலயப்பாதுகாப் பிலாகாவினரின் சுற்றறிக்கையை யொட்டி ஷை இலாகா

டிப்டி கமிஷனர் **ஸ்ரீ A. சக்கரை சேர்வை, B. A., B. L.,** உதவி கமிஷனர் **ஸ்ரீ K. V. குமரன் நாயர், B. A.** ஆகியோர் களது தூண்டுதலால் ஷை ஆலய நிர்வாஹ அதிகாரி **ஸ்ரீ K. R. கல்யாணசுந்தர முதலியார்,** டிரஸ்டி **ஸ்ரீ T. துரைய்யா பாண்ட்ராயர்** ஆகியோரது வேண்டு கோளின்படி இத்தல விபரம், அடியேனது சிறு அனுபவம், அறிவையொட்டி எழுதப்பட்டுள்ளது.

'பக்தி' என்ற ஒரே அடிப்படையில் நோக்கி, நல்லதை யெல்லாம் ஏற்குமாறு பொதுமக்களைப் பணிவுடன் வேண்டுகிறேன்.

இங்ஙனம்,

தஞ்சை,<br>*23—2—59*

**ஏ. எஸ். ரங்கநாதாச்சாரி.**



## ஸ்ரீ காளத்திநாதரும்

## ஸ்ரீ சாதாதப முனிவரும், சூரியனும்.



மும்மைநற் காலந்தன்னை
முன்னிடு முதன்மை வாய்ந்த
செம்மைநல் லறங்க ளாற்றுஞ்
சீர்சாதா தபனென்றோதும்
வெம்மைதொல் பவத்தை மாய்த்து
வேட்கைதீர் முனிவ ரன்றான்
இம்மையே முத்தி நல்கும்
எம்பிரா னாகு வானே.

# இதனுள்.


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1 | தலமும், இருப்பிடமும் | 1 |
| 2 | கோயிலின் அமைப்பு | 3 |
| 3 | அமைப்பின் விளக்கப்படம் | 6 |
| 4 | தலத்தின் வேறு பெயர்கள் | 10 |
| 5 | மூர்த்திகளின் பெயர்கள் | 10 |
| 6 | தீர்த்தங்கள் | 11 |
| 7 | தலச்சிறப்புகள் | 13 |
| 8 | சிற்பங்கள் | 15 |
| 9 | கல்வெட்டுகள் | 18 |
| 10 | நித்தியப்படிகள் | 12 |
| 11 | சிறப்பு விழாக்கள் | 13 |
| 12 | நிர்வாஹம் | 11 |
| 13 | வருமானமும் சொத்தும் | 12 |
| 14 | புராண வரலாறுகள் | 15 |
| 15 | திருப்பணிகள் | |
| 16 | தலப்பதிகங்கள் | 19 |
| 17 | திருஞானசம்பந்தர் தேவாரம் | 19 |
| 18 | திருநாவுக்கரசர் தேவாரம் | 26 |
| 19 | சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் | 25 |
| 20 | திருப்புகழ் (ஸ்ரீ அருணகிரியார்) | 42 |
| 21 | மற்றும் பல | 41 |
| 22 | ஸப்தஸ்தானத்தலங்கள் | 40 |
| 23 | அட்ட வீரட்டத்தலங்கள் | 37 |
| 24 | ஆலய தத்துவம் | 14 |
| 25 | விழாக்களின் தத்துவம் | 14 |
| 26 | சூரிய பூஜைத் தலங்கள் | 41 |

# கோயில் விளக்கம்.

ஜில்லா—தஞ்சை

தாலூகா—தஞ்சை

ஊர்—கண்டியூர்

கோயில்—கண்டியூர் வீரட்டம்

இறைவன்—ஸ்ரீ பிரமசிரக் கண்டீசர்

இறைவி—ஸ்ரீ மங்களநாயகி }
ஸ்ரீ மங்களாம்பிகா }

தீர்த்தம்—பிரமதீர்த்தம், குடமுருட்டி முதலியன.

தல விருக்ஷம்—வில்வம்

வழிபட்டோர்—சதாதபர் முதலியோர்

தேவாரப்பதிகம்—திருஞானசம்பந்தர்
—திருநாவுக்கரசர்

போற்றியோர் —சுந்தரர்
—அருணகிரியார் மற்றும் பலர்

சிறப்பு விழாக்கள்—மாசி மாதம் சூரிய பூஜை
—சித்திரை மாதம் ஸப்தஸ்தான விழா
—வைகாசி மாதம் சுக்ல பக்ஷம் சதுர்த்தி வருஷோத்ஸவம்.

வழி—தஞ்சாவூரிலிருந்து பஸ் வசதியுண்டு.

## ஆலயத்தின் முழுத்தோற்றம்.



கர்ப்பக்கிரக விமானம், முன் கோபுரம் முதலியவைகள்.

உ

சிவமயம்

# திருக்கண்டியூர் வீரட்டத் தல வரலாறு.

"திரமுறு ஞாநி சூழும் திருக்கண்டியூரமர்ந்து
வரம் பலதந்து சாதாதபற்குமா மனமகிழ்ச்சி
நிரம்பு நற்காட்சி காட்டு நிமல வீரட்டனூராம்
வரம்பில் பேரின்ப வெள்ளவாரிதி கழல்கள்போற்றி".

## தலமும் இருப்பிடமும்.

பொன்னி வளங்கொழிக்கும் புண்ணியம் பெற்றது சோழ நாடு. அதன் இரு மருங்குகளிலும் அமைந்துள்ள பாடல் பெற்ற சிவாலயங்கள் 190 ஆகும். அவைகளில், காவிரியின் தென் கரையில் 127ம், வடகரையில் 63ம் உள. திருக்கண்டியூர், தென்கரைத் தலங்களுள் 12வது ஆகும்.

தஞ்சாவூர் ஜில்லா, ஷை தாலுகாவைச்சார்ந்தது திருக்கண்டியூர் என்ற இத்தலம், தஞ்சாவூர் இரயில்வே நிலயத்திலிருந்து திருவையார் செல்லும் பெரும்பாட்டையில் 6 மைல் தூரத்தில் இவ்வூர் அமைந்துள்ளது. இவ்வூர் ஷை பஞ்சாயத்து போர்டின் நிர்வாகத்திலிருக்கிறது. ஜனத்தொகை 3169. பஞ்சாயத் போர்டு ஆபீசில் ஒரு ரேடியோ நிலையம் பொது மக்களுக்கென அமைக்கப்பட்டிருப்பதுடன் ஒரு பூங்கா, நூல் நிலையம் முதலியவைகளும் நிறுவப்பட்டுள்ளன. 'ஓவர் ஹெட் டாங்க்' நிறுவப்பட்டு சுத்த ஜலம் குழாய் மூலமளிக்கப்படுகிறது, 1 முதல் 5ம் வகுப்பு முடிய உள்ள ஒரு ஆண், ஒரு பெண் பாடசாலைகளும், பொது நல இலாகாவினரது ஒரு ஆரம்பப் பாடசாலையும் இவ்வூரிலுள்ளது.

இவ்வூரில் சிறந்த கைத்தொழிலாக இருப்பவை கீத்து முடைதல், மூங்கில் கூடை பின்னுதல் முதலியவையாகும்.

இவ்வழகிய சிறு கிராமத்தில், பிரமன், விஷ்ணு, ருத்ரன் ஆகிய முத்தொழில் புரியும் வித்தகர்கட்கும் தனித்தனி ஆலயங்கள், அமைந்துள்ளன. "புனல் மல்கு காவிரி மன்னு கண்டியூர்" என்றும், "கரையெலாந் திரை மண்டு காவிரிக் கண்டியூர்" என்றெல்லாம் இத்தலத்தைப் போற்றும் திருஞானசம்பந்தப்பெருமான் இதனைக் காவிரியின் தென்கரையிலிருப்பதாகப் போற்றுகிறாரேதவிர, குடமுருட்டி பற்றிய குறிப்பே எதுவும் அப்பதிகங்களிலில்லை. எனவே, குடமுருட்டியும் காவிரியின் பிரிவு என்ற காரணத்தால் காவிரி யெனவே அதனைக்கொண்டிருக்கக்கூடும். இத்தலப் பிரம சிரக்கண்டீசரை சாதாதபர், பிரமன், சூரியன் முதலியோர் பூஜித்ததுடன் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் போற்றி, பதிகம் பாடியுள்ளனர். ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகளும், இத் தலத்தைக் குறிப்பிட்டுள்ளார்கள். இதற்கு **ஆதிவில்வாரண்ய** மென்ற பெயரும் உண்டு. ஸப்தஸ்தான ஸ்தலங்களிலும், வீரட்டத் தலங்களிலும் சூரிய பூஜைத் தலங்களிலும் இது ஒன்று. ஸ்ரீ அருணகிரியாரின் பாடல்பெற்ற முருகன் இங்கு அமைந்துள்ளார். இத்தலத்திலுள்ள திருமாலின் ஆலயமும், பாடல்பெற்ற வைஷ்ணவத் திருப்பதிகளில் ஒன்று. இவை களினால் இத்தலச்சிறப்பு பன்மடங்கு பெருகுகிறது. மேலும், இத்தலத்தைச் சுற்றியும் உள்ள பாடல்பெற்ற திருத்தலங்கள் பல. இத்தலத்திற்கு ஒருமைல் வடக்கில், அப்பரடிகள் கைலைக் காட்சி கண்ட பஞ்சநதம் என்ற திருவையாறும், வடகிழக்கில் அப்பரடிகளையே தெய்வமாகக் கொண்டு போற்றித் தண்ணீர்ப் பந்தல் வைத்துநடத்திய அப்பூதியடிகள் அவதரித்ததும், இலை அறுக்கச்சென்றபொழுது அரவந்தீண்டிய அப்பூதியடிகளின் மகனை உயிர்ப்பிக்க "ஒன்றுகொலாம்" என்ற பதிகம் அப்பரடிகளால் பாடப்பெற்ற திருத்தலமுமான

திங்களூரும், அதன்கிழக்கில், சில காலம் அப்பரடிகளால் தங்கியிருக்கப்பட்ட திருத்தலமான திருப்பழனமும், நேர்க்கிழக்கில் 3 மைலில், கௌதமர் பூஜித்ததும், மூவர்போற்றியதுமான திருச்சோற்றுத்துறையும், தென்கிழக்கில் மறை பூஜித்த வேதிகுடியும், வடக்கில் 6 மைலில் ராஜராஜேச்சுரமும் மேற்கில் 3 மைலில், அக்னீச்வரமென்னும் திருவாலம்பொழிலும், அப்பரடிகள், திங்களும் ஞாயிறும் தோயுமாறு அமைத்த திருமடத்தையுடையதும், பொய்யிலியின்பொலிவுடன் கூடியதுமான திருப்பூந்துருத்தியும், வடமேற்கில், திருப்புனவாசல், பெரும்புலியூர், திருநெய்த்தானம் ஆகிய திருத்தலங்களும் சூழ்ந்து உள்ளன.

இத்தலப் பதிகங்களையும், கல்வெட்டுகளையும் ஆராய்ந்து பார்த்தால் இத்தலத் தொன்மையும், பெருமையும் நன்கு புலப்படுகின்றன. இவ்வூருக்கு கண்டியூரென்றும், இக்கோயிலுக்கு கண்டியூர் வீரட்டம், என்றும் பெயர் நிலவுகிறது.

திருஞானசம்பந்தப்பெருமானின் பதிகத்திலுள்ள 6-வது பாட்டும், நாயனர் பதிகத்து 3-ம் பாட்டும், இத்தல இறைவன் பிரமனது தலையைக் கொய்த செய்தியை விளக்குகின்றன. திருஞானசம்பந்தப்பெருமான், அடியார்களிடம் சிவனருளின் வண்ணங்களைக் கேட்டு மகிழ்ந்த விஞவுரையாக இத்தலப் பதிகத்தை (சிவபரதத்துவத்தை உலகிற்கு அறிவுறுத்தும் நிலையில்) அருளியுள்ளார்கள். இவை, திருநாவுக்கரசு சுவாமிகளின் திருச்சாழல் பதிகத்தை நினைவூட்டுகின்றன.

## கோயிலின் அமைப்பு

பிரமசிரக் கண்டீசர் என்கிற வீரட்டேசரின் ஆலயம், ஊரின் வடகோடியில், கடைத்தெருவில், மேற்கு நோக்கியுள்ளது. 5 நிலைக் கோபுரம் இராஜகோபுரமாக அமைந்துள்ளது, கோயிலின் நீளம் 335 அடியாகும். அகலம் 195 அடி. அழகிய உயர்ந்த 2 பிரகாரங்களைக் கொண்டது கோயில்,

தென் திருமதிலை யொட்டி அழகிய நந்தவனமிருக்கிறது. அதில் சில கனிதரும் மரங்களும் உள. இரண்டாவது கோபுரம் மொட்டை விமானத்துடன் உளது.

ஆலய முகப்பின் கோபுரத்தில் லிங்கோத்பவரும், விநாயகரும் நம்மை வரவேற்பர். அவர்களை வணங்கி ஆலயத்தின் முன்புறமுள்ள படிக்கட்டுகளில் இறங்கி, இறைவனை நோக்கிச் சென்றால், இடது புறத்தில் பெரிய தண்டபாணி மண்டபமிருக்கிறது. அதன் சமீபத்தில் ஒரு நூல் நிலையம் திறக்கப் பட்டுள்ளது. எதிரில், பலிபீடம், துவஜஸ்தம்பம், நந்திதேவர் மண்டபங்கள் உள. தெற்கு நோக்கிய ஸ்ரீ மங்களாம்பிகை அம்மையின் ஆலயமும் அங்கு இருக்கிறது. இவை யாவையையும் இரண்டாம் பிரகாரத்திலிருப்பவைகளாகக் கொள்ளலாம். இப்பிரகாரத்தின் கீழ்க்கோடியில் அழகிய யாகசாலை மண்டபமிருக்கிறது. தென் பிரகாரத்தில், காளியம்மன் ஆலயமும், அதனை யொட்டி பூங்காவனமுமிருக்கின்றன. 2-வது கோபுரத்திற்குள் நுழையுமுன் வலப்புறத்திலுள்ள ஸ்தலவிருக்ஷமான வில்வத்தைத் தரிசித்து, ராஜகணபதியையும் வணங்கலாம். சிறு ஆர்ச்சுடன் கூடிய 2வது கோபுரத்திற்குள் நுழைந்து உள்ளே சென்றால், இடப்புரத்தில் ஸ்ரீ சுப்ரமண்யம், வள்ளி தெய்வயானைகளுடன் காக்ஷியளிப்பார். அதனை யொட்டி ஸ்ரீ மஹாலக்ஷ்மியும், அடுத்து கருவூலமும், திருப்பள்ளியறைகளும் உள. அதற்குக் கீழ்புறம் ஆலய அலுவலகமுளது, இதனை முதல் பிராகாரமெனக் கொள்ளலாம். பிராகாரத்தின் கீழ்ப்புறத்தில் தெற்கு நோக்கி பைரவரும், அதனையொட்டி பரிவார தேவதைகளும் உளர். சண்டிகேசுவரர் ஆலயமும் கீழ்ப்பிராகாரத்தில் உளது. அக்னிமூலையில் மடைப்பள்ளியும், அதற்கு மேற்கில் (தெற்கு பிராகாரத்தில்) பிரமதீர்த்தமும், (கிணறு) இருக்கின்றன. தென் பிராகாரத்தின் மேற்குக் கோடியில் வாஹனமண்டபமிருக்கிறது. இனி ஆலயத்திற்குள் நுழைவோம். நுழையுமுன் இடதுபுறமுள்ள ஸப்தஸ்தான

க்ஷேத்ர லிங்கங்களையும், பஞ்சபூத லிங்கங்களையும், திருமழ பாடி லிங்கத்தையும் வழிபடலாம். வலப்புறத்தில், சாதாதப முனிவருக்காகக் காக்ஷியளித்த காளத்தி நாதரையும், சாதாதப முனிவரையும், சூரியனையும் தரிசிக்கலாம். அங்கிருந்து மஹா மண்டபத்திற்குள் நுழையும் பொழுதே இறைவன் வீரட்டேசன் காக்ஷியளிப்பார். இறைவனுக்கு வலப்புறத்தில், இறைவனை நோக்கிய நிலையில், (கிழக்கு நோக்கி) பிரமனும், ஸ்ரீ ஸரஸ்வதியும் தனி இடத்தில் அமர்ந்துள்ளனர். வட கோஷ்டத்தில் துர்க்கையம்மனும், தென் கோஷ்டத்தில் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியும் காக்ஷியளிக்கின்றனர். இது பற்றிய விபரமெல்லாங் கொண்ட ஆலய ஸ்கெச் இதனை விவரிக்கும்.



# கோயிலின் அமைப்பு. (படம்)

(தென்வடலடி 195 அடி.)



# கோயிலின் அமைப்புப் பட விவரம்.

1 ராஜகோபுரம் (மேற்கு நோக்கியது 5. தளம்)
2 அண்ணாமலையார்
3 துவாரபாலகர்
4 ,,
5 விநாயகர்
6 ஸ்ரீ தண்டபாணிஸ்வாமி மண்டபம்
7 பலிபீடம்
8 த்வஜஸ்தம்பம் (கொடிமரம்)
9 நந்திதேவர் மண்டபம்
10 ஸ்ரீ மங்களாம்பிகா ஆலயம்
11 யாகசாலை
12 ஸ்ரீ காளியம்மன் (அமர்ந்த நிலையில்)
13 தோட்டம்
14 தென்புறவாசற்படி
15 மண்டபம், கிணறு
16 ராஜகணபதி
17 வில்வமரம் (ஸ்தலவிருக்ஷம்)
18 2-வது கோபுரம் (விடையூர்தியுடன் சிறுவளைவு)
19 ஸ்ரீ சுப்பிரமணியம், வள்ளி, தெய்வயானை
20 ஸ்ரீ மஹாலக்ஷ்மி
21 கருவூலம்
22 திருப்பள்ளியறை
23 ஸ்ரீ நடராஜா ஸன்னிதி
24 ஆலய அலுவலகம்
25 பிரமன், ஸரஸ்வதி (மேற்கு நோக்கி)
26 துர்க்கை
27 சண்டிகேச்வரர்
28 பைரவர்
29 ஒரு அம்பாள்
30 ஸப்த கணபதிகள்
31 சந்திரன்
32 அர்தநாரீச்வரர்
33 சூரியன்
34 மடைப்பள்ளி
35 நந்தி தீர்த்தம் (கிணறு)
36 தக்ஷிணாமூர்த்தி
37 நுழைபாதை (தென்திசை)
38 வாஹன அறை
39 ஸ்ரீ ஸோமாஸ்கந்தர் (கிழக்கு நோக்கி)
40 ஸ்ரீ சந்திரசேகரர்
41 உக்ராணம்
42 ஸ்ரீ விநாயகர்
43 ஸப்தஸ்தான க்ஷேத்ரலிங்கங்கள்
44 திருமழபாடிலிங்கம்
45 பஞ்சபூத லிங்கங்கள்
46 திருக்காளத்திலிங்கம்
47 துவாரபாலகர்
48 do
49 ஸ்ரீ காளத்தி நாதர்
50 ஸ்ரீ சாதாதப முனிவர்
51 கல்ப்பசூரியன்
52 நுழைபாதை
53 நவக்ரகங்கள்
54 பலிபீடம்
55 நந்தி தேவர்
56 முருகன், தெய்வயானை
57 ஸ்ரீ கணபதி
58 சுவாமி (ஸ்ரீ பிரமசிரக்கண்டீசர்)

ஸ்ரீ பிரமதேவரும், ஸ்ரீ ஸரஸ்வதியும்.



## ஸ்ரீ பிரமன்.

நான்மறை நவின்ற நாவான்
ஞாலத்தைப் படைக்கு மண்ணல்
மேன்முறை யுணரும் பெற்றி
பெற்றிலாப் பிழைதன்னாலே
மேன்முடி துணியப்பெற்று
மேனிலையெய்துமெங்கள்
வான்வந்து தங்கும் கண்டி
யூருறை மலரோற் போற்றி.

## ஸ்ரீ ஸரஸ்வதி.

கொள்ளை பொழிற் கண்டி கொழுநகரிற்
கொழுநனோடும்
வள்ளைக் குழையுமையாள் பங்காளன்
மனமகிழ
கள்ளை யுமிழ்மலராற் கடுகவழி
பாடியாற்றும்
வெள்ளைக் கமலத்துவிமலை மல
ரடி போற்றி.



## மூர்த்திகளின் பெயர்.

இத்தல இறைவன், ஸ்ரீ பிரமசிரக்கண்டீசரென்றும் ஸ்ரீ வீரட்டேசரென்றும், குறிப்பிடப்படுகின்றார்.

கல்வெட்டுகளில், திருவீரட்டானத்து மகாதேவர், திருக்கண்டியூருடைய மகாதேவர் என்ற குறிப்பு காணப்படுகிறது. பிரமனுக்கு அருள்செய்ததால் பிரமநாதரென்றும், ஆதிவில்வவனத் தலைவராதலால் ஆதிவில்வநாதரென்றும் திருநாமங்களும் உள.

இறைவி ஸ்ரீ மங்களநாயகி என்றும் ஸ்ரீ மங்களாம்பிகை என்றும் போற்றப்படுகிறாள்.

உமாபதி சிவாசாரியாரின், "எழில்சேர்ந்த கண்டியூர் வாழ் **மங்களநாயகி** புணரும் இண்டைச்சடை **வீரட்டேசனே**" என்ற கண்ணி இதனை நிரூபிக்கிறது.

## தலத்தின் பெயர்கள்.

இத்தலம், திருக்கண்டியூர் என்று தற்சமயம் வழங்கப் படுகிறது. தேவாரப்பதிகங்களிலும், பெரியபுராணத்திலும் இப்பெயரே காணப்படுகின்றன. பிரமனது சிரசைக் கண்டனம் (துண்டித்தல்) செய்ததால் 'கண்டனபுரம்' என்ற பெயர் ஸம்ஸ்கிருத நூல்களில் காணப்படுகிறது.

சாதாதப முனிவருக்காக இத்தலத்தில் முதலில் வில்வ மரம் சிவபெருமானால் கைலையிலிருந்து தோற்றுவிக்கப்பட்டதால் 'ஆதிவில்வாரண்யம்' என்ற மற்றொரு பெயரும் காணப் படுகிறது.

சிவபெருமான் தமது வீரத்தை வெளிப்படுத்திய எட்டு ஸ்தலங்களுள் இதுவும் ஒன்றாதலின் 'கண்டியூர் வீரட்டம்' என்ற சிறப்புப் பெயருமுண்டு.

## தீர்த்தங்கள்.

ஆலயத்திற்கு ஒரு பர்லாங் வடக்கில் காவிரியின் பிரிவு நதியாகிய குடமுருட்டியும், ஆலயத்திற்குள் தெற்குஉள் பிராகாரத்தில், நந்தி தீர்த்தமென்ற கிணரும் அமைந்துள்ளன. மற்றும்,

தக்ஷதீர்த்தம்

சூல தீர்த்தம்
கபால தீர்த்தம் }

முரி தீர்த்தம்
ஆதி தீர்த்தம்
பாதாள கங்கை
நந்தி தீர்த்தம்
குடமுருட்டி } கிணறு.

பிரமநதி
பிரமதீர்த்தம் } வடமேற்கில் குளம்.

ஆகியவைகள் சிறப்பாக ஸ்தலபுராணத்தில் குறிக்கப்படுகின்றன. அவைகளில் நீராடி முக்திபெற்றோர் பலர்.

## நிர்வாஹம்.

இந்த ஸ்ரீ பிரமசிரக்கண்டீசர் ஆலய நிர்வாஹத்தைத் திறம்பட நடத்த 1945 ஆண்டு நவம்பர் மீ 9உயில் எண்டோமெண்ட் போர்டார் அவர்களால் ஒரு ஸ்கீம் B. O. No 3660 உத்திரவுப்படி) போடப்பட்டுள்ளது. அது முதல் ஷை ஆலய நிர்வாகம், அறநிலயப் பாதுகாப்பிலாகாவின் கண்காணிப்பில், நிர்வாக அதிகாரியின் மேற்பார்வையிலிருந்து வருகிறது.

தற்சமயம் இலாகாவினரது 31—3—1958 தேதிய R. C. No. 11961/1955 A 3. உத்திரவின்படி இவ்வூர் மிராசுதாரான ஸ்ரீ T. துரய்யா பாண்ட்ராயர் (ஒரே டிரஸ்டி) நியமிக்கப்பட்டு நிர்வாஹத்தைக் கவனித்து வருகிருர். ஸ்ரீ K. R. கல்யாணசுந்தர முதலியார் நிர்வாக அதிகாரியாக இருந்து பணியாற்றிவருகிருர்.

## வருமானமும்—சொத்தும்.

இவ்வாலயத்திற்கு 112 ஏக்கர் 64 செண்ட் நஞ்சை நிலமும் 29 ஏக்கர் 92 செண்ட் புஞ்சை நிலமும், ஆக 142 ஏக்கர் 56 செண்ட் நிலமுளது. (வார நிலங்கள் உள்பட)

இதன் மூலமாக வருஷ வருமானம் சுமார் 12,500 ரூபாய் வருகிறது. தினப்படி பூஜை, மற்றும் சிறப்பு விழாக்கள் உள்பட எல்லாவற்றிற்குமாக வருஷச்சிலவு சுமார் 12 ஆயிரம் ஆகிறது.

## நகைகள்.

இவ்வாலயத்திலுள்ள நகைகள், நகை தணிக்கை அதிகாரியால் முறைப்படி இதுவரை சோதனைசெய்து பார்க்கப்படவில்லை. எனினும், செக்ஷன் 25 ரெஜிஸ்தர்படி நகை மதிப்பு சுமார் ரூ. 2655—13—0 எனத் தெரிகிறது.

## தினசரிபூஜை.

தினமும், ஆலயத்தில் காலசந்தி, உச்சிக்காலம், ஸாயரக்ஷை, அர்த்த ஜாமம் ஆகிய நான்கு காலபூஜைகள் நடைபெறுகின்றன. ஓதுவாமூர்த்திகள் நியமிக்கப்பட்டு முறைப்படி பதிகம் பாடிவருகிருர்கள்.

## சிறப்பு விழாக்கள்.

ஆண்டுதோறும் மாசி மீ 13, 14, 15 தேதிகள் சூரிய பூஜை நடைபெறுகிறது. அத்தினங்களில் சூரியனது கிரணங்கள் இறைவன் மீது விழுகின்றன.

சித்திரை மாதத்தில், திருவையாறு ஸப்தஸ்தான விழாவையொட்டிய விழா மிகச் சிறப்பாக நடைபெறுகிறது, திருவையாறு, திருப்பழனம், திருச்சோற்றுத்துறை, திருவேதிகுடி ஆகிய திருத்தல சுவாமிகள், அழகிய பல்லக்கில் இத்தலத்திற்கு எழுந்தருளுவர். விசேஷ பூஜைகள் நடைபெற்றபின் இத்தல இறைவனும் பல்லக்கில் அமர்ந்து உடன் செல்வார். எல்லா பல்லக்குகளும் திருப்பூந்துருத்தி செல்லும். பின், திருநெய்த்தானம் திருவையார் சென்று அவரவரது ஆலயத்திற்கு எழுந்தருளுவர். இது மிகப்பெரிய திருவிழாவாகும். பல்லாயிரம் மக்கள் இதில் கலந்துகொள்வர்.

வைகாசி மாத பிரம்மோற்சவமும் சுக்லபக்ஷ சதுர்த்தி திதியில் துடங்கி 10 தினங்கள் முறைப்படி சிறப்பாக நடைபெற்று வருகிறது.

## ஸ்தல புராணம்.

இத்தலச் சிறப்புகளை விளக்கும் ஸ்தல புராணம் ஒன்று 14 அத்யாயங்களுடன் ஸம்ஸ்கிருதத்திலிருப்பதாகத் தெரிகிறது. அதனையொட்டி தமிழில் எழுதப்பட்ட ஒரு சிறு நூலும் உளது. அது திருப்பாதிரிப்புலியூர் சரஸ்வதி அச்சுக்கூடத்தாரால் திருக்கண்டியூர் புராணம் என்ற பெயருடன் 1939-ல் வெளியிடப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. ஆனால், அது புராணக் கதைகளை மட்டிலும் கொண்டது.

தற்கால சூழ்நிலைக்கேற்ப, புதுமுறையில், தக்க படங்களுடன், பழய நூல்களை ஆராய்ந்து இத்தல வரலாறு வெளியிடப்படுகிறது.

## ஆலய உண்மை நோக்கம்.

ஆங்காங்கு ஆலயங்கள் அமைக்கப்பட்டுள்ளதின் நோக்கம் வருமாறு:- கர்ப்பக்கிரகத்திலுள்ள இறைவன் பதியெனப் படுவர். பதி, பேரறிவுடையவர். சுவாமியின் எதிரில் உள்ள நந்திதேவர் பசு எனப்படும். அது சிற்றறிவுடையதாகும். பலிபீடமே பாசம் எனப்படும். அது அறிவற்றது. **பசுவாகிய உயிர், பாசம் நீங்கி, பதியை அடையவேண்டுமென்பதே ஆலய தத்துவம்**—இதனைத் திருமூலர் தம் திருமந்திரத்தில்,

“ஆயபதி தானருட் சிவலிங்கமாம்
ஆயபசுவு மடலேறென நிற்கும்
ஆய பலிபீட மாகுநற் பாசமாம்
ஆய அரனிலை ஆய்ந்துகோள்வார்கட்கே.”

எனக் குறிப்பிடுகிறூர்.

## பூஜைகளின் நோக்கம்.

ஆலயத்திலுள்ள எல்லா மூர்த்திகட்கும் அருளும் ஸாந்நித்யமும் பெருக நித்திய பூஜை, நைமித்திக பூஜைகள், காம்ய பூஜைகள் நிகழ்கின்றன. பூசனைகள் சரிவர நிகழாவிடில் நாட்டில் தீமை ஏற்படுமென்பதை பலர் கூறியுள்ளனர்.

“சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கு மீண்டு”

என்ற வள்ளுவனாின் வாக்கும் சிந்திக்கத்தக்கது.

## உற்சவங்கள் ஏன் ?

மண்ணினிற் பிறந்தார் பெறும்பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார்தமை அமுது செய்வித்தல்
கண்ணினாலவர் நல்விழாப் பொலிவுகண்டார்தல்
உண்மை யாமெனின் உலகர்முன் வருகென
வுரைப்பார்

என்ற பாட்டில், சேக்கிழார் பெருமான் மனிதப் பிறவியின் பயனிரண்டென்றும், ஒன்று அடியார்க்கன்னமளித்தலென்றும், மற்றொன்று விழாவினைக் காணுதலென்றும் கூறுதலால் தெளிவாகும். விழாக்களின் உட்தத்துவங்களை விளக்கும் ஆகமங்கள் 28. அதை ஆதாரமாகக்கொண்டு, பல பகுதிகளில் பலவாறு நடத்தப்படுகிறது.

கோவிலுக்குச் செல்ல இயலாதவர்கட்கும் தரிசனமும், புண்ணியமும் கிட்டுமாறு செய்வன இவ்விழாக்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## புராண வரலாறுகள்.

### பிரமநாதனென்ற பெயர் வந்தது.

ஆதியில், சிருஷ்டி கர்த்தாவாகிய பிரமன் இத்தத்தில் எழுந்தருளியுள்ள இறைவனை வழிபட்டதாகவும், அதனால் இத்தலத்திற்கு 'பிரமபுரி' என்றும், இறைவனுக்கு 'பிரமநாத' ரென்றும் பெயர்கள் ஏற்பட்டனவென்றும் ஒரு வரலாறு கூறுகிறது.

### துரோணர் புத்திரப்பேறடைந்தது.

துரோணாசாரியார், தமக்குப் புத்திரப்பேறில்லாக் குறையைப் போக்க, இங்குள்ள இறைவனை வணங்கி தும்பை மலரால் அர்ச்சித்துப் புத்திர ஸந்தானம் பெற்றதுபற்றி மற்றோர் வரலாறு விவரிக்கிறது.

### பிரமனது சிரஸைக் கண்டித்தது,

சிவபெருமானுக்குஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், ஸத்யோஜாதம் என்று போற்றப்படும் ஐந்து திருமுகங்கள் உண்டு. சிருஷ்டி கர்த்தாவான பிரமனுக்கும் ஐந்து முகங்கள் இருந்தன. பார்வதி தேவியாரின் வேண்டுகோளின்

படி, சிவபெருமான் தமக்கு ஒப்பாக இருந்த பிரமனது ஒரு சிரஸ்ஸைத் தமது சூலாயுதத்தால் கண்டித்தாகவும், அச்சம் பவம் இத்தலத்தில் நடைபெற்றதால், இதற்கு கண்டனபுர மென்றும் இறைவனுக்கு பிரமசிரக்கண்டீசரென்றும் பெயர் ஏற்பட்டது. ஆலயத்தில் பிரமனும், ஸரஸ்வதியும் இறைவனை நோக்கி வீற்றிருப்பதை இன்றும் காணலாம். இறைவன் தம் வீரத்தை வெளிப்படுத்திய எட்டு இடங்களுள் இத்தலம் முத லாவதாகத் திகழ்கிறது.

## ஆதி வில்வாரண்யமானது.

சதாதபர் என்ற முனிவர் பெரிய சிவபக்தராக இருந்தார். அவர் தினமும் பல திருத்தல சிவபெருமானை வழிபடுவதுடன் பிரதோஷ நேரத்தில் திருக்காளத்தியிலுள்ள ஸ்ரீ காளத்தி நாதரை தவருமல் வணங்குவதை விரதமாகக் கொண்டிருந்த துடன், இதில் ஒரு நாள் தவறினும் தாம் நெருப்பில் வீழ்ந்து உயிரை மாய்த்துக்கொள்வதாகச் சபதஞ் செய்திருந் தார். அதன்படி நடத்தியும் வந்தார். ஒருநாள் பிரதோஷ சமயத்தில் திருக்கண்டியூரருகில் தங்கநேரவே, அங்கு கனலை வளர்த்து, உயிரைவிட முயற்சித்தார். அவ்வமயம் அங்கு இறைவன் ஒரு வில்வமரத்தை அனுப்பி, பின் அதில் தாமும் உமாதேவியாருடன் தோன்றி சதாதபரின் பக்தியைப் போற்றி அவருக்கு அருள் செய்தார். எனவே இத்தலத்தில் முதலில் வில்வமரம் தோன்றியதால் ஆதிவில்வாரண்யமென்ற பெயர் ஏற்பட்டது. இன்றும், ஆலயத்தில் வில்வமே ஸ்தல விருக்ஷம்,

சதாதபருக்கு இறைவன் எப்பொழுதும் காக்ஷி கொடுத் துக்கொண்டிருப்பதையும் ஆலயத்தில் காணலாம்.

## தக்கன் சிவனருள் பெற்றது.

தக்ஷப்பிரஜாபதி என்பவன் சிவபெருமானை அவமதித்து சிவத்ரோஹம் செய்த பாபத்தைப் போக்க இத்தல இறைவனை இறைஞ்சிப் பாபம்களைந்தானும்.

## பகீரதன் கங்கை கொண்டுவந்தது.

பகீரதன், பல முயற்சிகள் செய்தும் கங்கையைப் பூமிக்குக் கொண்டுவர முடியாமல் போனதால், குலகுருவாகிய வசிஷ்டரின் ஆணையின் வண்ணம் இத்தல இறைவனை முறைப்படி வழிபட்டு, அருள்பெற்று கங்கையைப் பூமிக்குக் கொண்டு வந்தானும். சிக்கலானதும், இயலாதெனக் கருதப்படுவது மான காரியங்கள் கூட இத்தல இறைவனது அருளால் கை கூடுமென விவரிக்கப்படுகிறது.

## சித்ரத்வஜன் பேறுபெற்றது.

ஒருசமயம், சித்ரத்வஜன் என்னும் பெயருடைய கந்தர்வனொருவன், ஓர் அழகிய பூங்காவில், தன் பிரியம் நிறைந்த குணவதி என்றவளோடு மகிழ்ந்திருந்தான். கங்கையில் நீராட அவ்வழி சென்ற **தேவலர்** என்ற முனிவர் இவர்களிருந்த இழி நிலை கண்டு சீற்றமுற்று சித்ரகேதுவை ராக்ஷஸனாகவும், குணவதியை மரமாகவும் ஆகுமாறு சபித்தார். உடனே அவர்கள் மிகவும்வருந்தி மன்னிக்குமாறு முனிவரிடம் வேண்டினர். முனிவர், கோபந் தணிந்து, "விரைவில் இவ்வழியாக காளத்திநாதரை தரிசிக்க அகத்தியரின் மாணவரான சாதாதபர் அடியார்களுடன் வருவார். அவரை நீ விழுங்கச் செய். அவர் உனக்கு சாப விமோசன மளிப்பா"ரென்றார். உடன், கந்தர்வன் பிரம்மராக்ஷஸனாகவும், குணவதி பலாச மரமாகவும் மாறி ஐயாற்றின் அருகில் காவிரியின் தென்பாலுள்ள காட்டில் வசித்தனர். திருக்காளத்திநாதரை சனிக்

கிழமை, பிரதோஷ காலத்தில் வணங்குபவர்கட்கு பிரமஹத்தி முதலிய பாபம் நீங்குமென சீடர்களுக்கு சாதாதபர் உபதேசித்து தம் யோகசக்தியால் தினமும் காலையில் தனுஷ் கோடியிலும், உச்சிக்காலத்தில் கங்கையிலும் நீராடி தமது நிலயமாகிய மலயப்பிரதேசம் திரும்பி, நடுப்பகல் கடன் முடித்து மீண்டும் அந்தியில் திருக்காளத்தி சென்று சாயரக்ஷையில் பொன்முகரியில் நீராடி இறைவனை தரிசித்து இரவே நிலயம் திரும்புவது என்று சபதம் செய்து அதன்படி தினமும் நடத்தி வந்தார். ஒரு நாள். கண்டியூரருகில் வந்தபொழுது (விடா மழையின் காரணமாக) ஒரு மரத்தின் கீழ் தங்கினர். அம் மரம்தான் குணவதி. அங்கிருந்த பிரம்மராக்ஷஸனாகிய சித்ரத்வஜன் அம்முனிவரை அணுகி அபசாரப்பட்டதால், அவர் கமண்டலு நீரை அவன் மீது தெளித்தார், உடன் அவன் சாபந் தீர்ந்து கந்தர்வனானன். குணவதியும் சாப விமோசன முற்றாள்.

## கல்வெட்டுகள்.

இவ்வீரட்டேச்வரர் ஆலயத்தில் கோவிசைய நிருப தொங்க விக்ரமவர்மன் என்ற பல்லவ மன்னன் காலத்திய கல்வெட்டும், சோழமன்னர்களாகிய மதுரைகொண்ட கோப்பரகேசரிவர்மன், உத்தமசோழன், பாண்டியன் தலை கொண்ட கோப்பர கேசரிவர்மன், முதலாம் இராஜேந்திர சோழன் ஆகியோர் காலத்திய கல்வெட்டுகளும் காணப்படு கின்றன. இவைகளின் வாயிலாக இறைவன் நிவேதனங் கட்கு அமுது செய்யவும், திருநுந்தா விளக்குகள் எரியவும், விசேஷ புண்யகால பூஜைகட்கும், திருப்புகைக்கான குங்கிலியத் திற்கும் (சாம்ப்ராணிக்குப் பதிலாக) பரிவட்டங்கள், புடவை கட்கும், திருவாராதனை, பரிசாரகம், கரணத்தான், திருவலகு, திருமெழுக்கு இடுவாளுக்கும் நிவந்தங்கள் விடப்பட்டுள்ள செய்தி தெரிகிறது. நட்டுவம், மெய்மட்டு, மோர்வியம் இவைகளின் பொருட்டும் நிலம் விடப்பட்டுள்ளது.

இவ்வூரில் ஒரு சபை யிருந்ததாகவும், அவர்கள் நிவந்தம் பெறுதல் முதலிய காரியங்களைச செய்துவந்ததாகவும் தெரிகிறது.

ஆர்க்காட்டுக் கூற்றத்தினில் அடங்கியதாக இவ்வூர் இருந்தது.

"அறம் மறவற்க அறமல்லது கைதராதே" என்பது காப்புரையாக அமைந்துள்ளது, இராஜேந்திர சோழன் காலத்திய கல்வெட்டில்.

இதன் மூலம், இராஜேந்திர சோழனது உளத்தை நாம் அறிந்து சுவைக்கமுடிகிறது. அறியவேண்டிய பழங்காலத்திய பண்பு, வழக்கங்கள் இவைகளில் பல பொதிந்து கிடக்கின்றன.

இது பற்றிய முழுவிபரமும் காண விரும்புபவர்கள் Annual Report on South Indian Epigraphy for the year 1895 Numbers 13—23லும், South Indian Inscription Volume III Number 134; Volume VI Numbers 568—579 களில் காணலாம்.

---

உ

சிவமயம்

## திருஞானசம்பந்த சுவாமிகள் திருப்பதிகம்.

### பண்—கொல்லி.

"நவரோஜ்"—ராகம். "சாபு"—தாளம்

திருச்சிற்றம்பலம்

வினவினே னறியாமை யில்லுரை
செய்ம் மினீ ரருள் வேண்டுவீர்
கனைவிலார் புனற் காவிரிக்கரை
மேய கண்டியூர் வீரட்டன் (1)

தனமுனே தனக்கின்மை யோதம
ராயினுரண்ட மாளத்தான்
வனனில் வாழ்க்கை கொண்டாடிப்பாடியிவ்
வைய மாப்பலி தேர்ந்ததே.

பொருள். இறையருளை வேண்டி நிற்கும் அடியார்களே! இறைவன், தம்மைச் சார்ந்தவர்களை நாடாளச்செய்து, தாம் மட்டிலும் காட்டில் வாழ்ந்து, ஆடியும், பாடியும் பலி பெற்றுண்பதின் கருத்தென்னவென்பதை, எனக்குக்கூறுவீர்களாக. செல்வமில்லாக்காரணத்தினுலா ?

உள்ளவாறெனக்குரை செய்மின்னுயர்
வாய மாதவம் பேணுவீர்
கள்ளவிழ் பொழில் சூழுங் கண்டியூர்
வீரட்டத்துறை காதலான்
பிள்ளைவான் பிறை செஞ்சடைம்மிசை
வைத்ததும் பெரு நீரொலி
வெள்ளந் தாங்கியதென் கொலோமிகு
மங்கை யாளுடனுகவே

பொருள். கண்டியூர் வீரட்டன், தம் உடலிற் பாதியை மங்கைக்களித்து, தலையில் இளமதி சூடி, பிறையையும் உடன் சேர்த்து வைத்திருப்பது பற்றுதலாகாதா ? தவம் புரியும் அடியார்களே, இதன் கருத்தை உள்ளவாறு உரையுங்கள்.

அடிய ராயினீர் சொல்லு மின்னறி
கின்றிலேனரன் செய்கையைப்
படியெலாந் தொழுதேத்து கண்டியூர்
வீரட்டத்துறை பான்மையான்
முடிவுமாய் முதலாயிவ் வைய
முழுது மாயழகாய தோர்

பொடியதார் திருமார்பினிற்புரி
நூலும் பூண்டெழு பொற்பதே.

பொருள். உலகந் தொழுதேத்தும் இறைவன் உலக முழுவதுமாய், முதல், முடிவுகளாயுமுள்ள தமது தூய திரு மேனியில் முப்புரி நூல் அணிந்துகொள்வதேன்?—இதன் கருத்தை விளக்குமின்.

பழைய தொண்டர்கள் பகருமின்பல
வாயவேதியன் பான்மையைக்
கழையுலாம் புனன் மல்குகாவிரி
மன்னு கண்டியூர் வீரட்டன்
குழையொர் காதினிற் பெய்துகந்தொரு
குன்றின் மங்கை வெருவுறப்
புழைநெடுங்கை நன்மாவுரித்தது
போர்த்துகந்த பொலிவதே.

பொருள். பலவடிவங்களில் தோன்றும் தன்மையுடைய கண்டியூருறை இறைவன், ஒரு காதில் குழையணிந்திருப் பினும், மலை மகளார் அஞ்சும் நிலையில் பெரிய யானையின் தோலை உரித்துப் போர்த்திக் கொண்டு திகழுவதேன்.

விரவி லாதுமைக் கேட்கின்றேனடி
விரும்பியாட் செய்வீர் விளம்புமின்
கரையெலாந் திரைமண்டு காவிரிக்
கண்டியூருறை வீரட்டன்
முரவ மொந்தை முழாவொலிக்க
முழங்கு பேயொடுங் கூடிப்போய்ப்
பரவுவானவர்க் காகவார் கடல்
நஞ்ச முண்ட பரிசதே.

**பொருள்.** அடியார்களே! அலை மோதும் வளம்மிக்க காவிரியின் கரையில் கண்டியூரிலுள்ள வீரட்டேசன், வாத்யங்கள் முழங்க, பூதகணங்களோடு சென்று, தம்மை வேண்டும் வானவர்க்காக விஷத்தை உண்டதேன்? கூறுங்கள்.

இயலு மாறெனக்கியம்பு மின்னிறை
வன்னுமாய் நிறை செய்கையைக்
கயநெடுங் கண்ணினர்கள் தாம்பொலி
கண்டியூருறை வீரட்டன்
புயல் பொழிந்திழி வானுளோர்களுக்
காகவன்றயன் பொய்ச்சிரம்
அயனகவ்வ தரிந்து மற்றதில்
ஊணுகந்த வருந்தியே,

**பொருள்.** சிவபெருமான் தேவர்களுக்கிரங்கி, பிரம தேவனது தலையைக்கொய்து, அதில் ஏன் பலிதேர்ந்துண்ண வேண்டுமென்பதை எனக்கு இயம்புமின்.

திருந்து தொண்டர்கள் செப்புமின் மிகச்
செல்வன்றள்ளது திறமெலாம்
கருந்தடங் கண்ணினர் கடாந்தொழு
கண்டியூருறை வீரட்டன்
இருந்து நால்வரொ டானிழல்லறம்
உரைத்ததும் மிகு வெம்மையார்
வருந்தவன் சிலை யாலம்மா மதின்
மூன்று மாட்டிய வண்ணமே.

**பொருள்.** கல்லால நிழலமர்ந்து நால்வற்கு அறம் முதலிய நான்கின் தத்துவத்தினை விளக்கிய இத்தல இறைவன், திரிபுரர்கள் வருந்தும்படி தம் வில்லால் முப்புரமும் மதிலையும் எரித்தொழித்தது ஏன்? குற்றமற்ற தொண்டர்களே, கூறுங்கள்.

காவிரித்தரன் றெல் புகழ்பல
பேணுவீரிறை நல்குமின்
காவிரித்தடம் புனல்செய் கண்டியூர்
வீரட்டத்துறை கண்ணுதல்
கோவிரிப் பயனுனஞ் சாடிய
கொள்கை யுங்கொடி வரைபெற
மாவரைத்தலத் தாலரக்கனை
வலியைவாட்டிய மாண்பதே.

**பொருள்.** பசுவின் கண் விளையும் ஐந்தினை விரும்பி யாடிய தன்மையுள்ள கண்டியூரிறைவன், அம்மையார் அச்சம் நீங்கி நிலைபெறுமாறு, தமது திருவடித் தலத்தால் இராவணனை நெருக்கி, அவன் வன்மையைப் போக்கிய மாட்சிமைதானென்னே? அரன் புகழ் பாடும் பெரியோர்களே, சொல்லுங்கள்.

பெருமையே சரணாக வாழ்வுறு
மாந்தர்காள்! இறை பேசுமின்
கருமையார் பொழில் சூழந்தண்வயற்
கண்டியூருறை வீரட்டன்
ஒருமை யாலுயர் மாலுமற்றை
மலரவன் னுணர்ந் தேத்தவே
அருமை யாலவ ருக்குயர்ந்தெரி
யாகி நின்றவத் தன்மையே.

**பொருள்.** தன்பெருமையே குறிக் கோளாகக்கொண்டு வாழும் அடியார்களே! கண்டியூர் வீரட்டன், தவம் மிக்க மாலும், பிரமனும் தேடுதற்கரியவனாய் விண்முகடுங்கடந் தொளிப்பிழம்பாய் நின்றதேன். கூறுமின்.

நமரெழுபிறப் பறுக்கு மாந்தர்காள் !
நவிலுமின் உமைக் கேட்கின்றேன்
கமிரழிவயல் சூழுந்தண் புனற்
கண்டியூருறை வீரட்டன்
தமரழிந்தெழு சாக்கியச் சம
ணுதரோது மது கொளா
தமர ரானவ ரேத்த வந்தகன்
றன்னைச் சூலத்திலாய்ந்ததே.

**பொருள்.** இத்தல இறைவன், சுற்றத்தாரை நீக்கி வாழும் சாக்கியர், சமணர் உரைகேளாது வாழும் தேவர்கள் வேண்ட சூலத்தால் இயமனைக் கடிந்தவாறு தானென்னே ? பிறவிகளைக் களையவல்ல பெரியோர்களே, விடையளியுங்கள்.

கருத்தனைப் பொழில் சூழுங்கண்டியூர்
வீரட்டத்துறை கள்வனை
அருத்தனைத்திற மடியார்பால் மிகக்
கேட்டுகந்த வினுவுரை
திருத்த மாந்திகழ் காழிஞானசம்
பந்தன் செப்பிய செந்தமிழ்
ஒருத்தராகிலும் பலர்களாகிலும்
உரைசெய்வாருயர்ந் தார்களே.

**பொருள்.** ஞானசம்பந்தப் பெருமானல் வினு வுரையாக அடியார்களிடம் விரும்பிக் கேட்கப்பட்ட இப்பதிகத்தை ஒருவர் முதல் பலர் பாடினும், உலகத்தில் பெருமையடைவர்'

## சுந்தரமூர்த்தி சுவாமிகள்

### தேவாரம்.

நாளூ நன்னிலம் தென்பனை
யூர்வட கஞ்சனூர்
நீளநீள்சடை யானெல்லிக்
காவு நெடுங்களம்
**காளகண்ட னுறையுங்**
**கடைமுடி கண்டியூர்**
வேளா நாட்டு வேளூர்
விளத்தூர் நாட்டு விளத்தூரே

**—சுந்தரர்**

குறிப்பு:—இப்பாட்டில், பல திருத்தலங்கள் குறிக்கப்படுகின்றன. அவற்றுள் **கண்டியூரும்** குறிப்பிடப்பட்டுள்ளது.

## திருநாவுக்கரசு சுவாமிகள் திருப்பதிகம்

### திருவிருத்தம்

இராகம்—நவரோஜ்] [தாளம்—ஆதி.

திருச்சிற்றம்பலம்

வானவர் தானவர் வைகன்
மலர்கொணர்ந் திட்டிறைஞ்சித்
தானவர் மால் பிரமன்னறி
யாத தகைமை யினுன்
ஆனவ னுதிபு ராதனன் அன்
ஞேடிய பன்றியெய்த
கானவனைக் கண்டி யூரண்ட
வாணவர் தொழுகின்றதே.

பொருள். கண்டியூரில் உள்ள வீரட்டேசனை வணங்குவது நம் தொழில். ஏன்? தேவர்களும் அசுரர்களும் நாள் தவருது வணங்குகின்றனர் அவனை. மாலும், பிரமனும் அறிய வொண்ணுத தன்மையனுன அவன், மிகப்பழமைவாய்ந்தவன், அருச்சுனனது தவத்தைக் கலைக்கவந்த பன்றியை வென்ற வேடன்.

வான மதியமும் வாளர
வும்புன லோடுசடைத்
தான மதுவென வைத்துழல்
வான்றழல் போலுருவன்
கான மறியொன்று கையுடை
யான்கண்டி யூரிருந்த
ஊனமில் வேத முடையனை
நாமடி யுள்குவதே.

**பொருள்.** இவ்வூரிறைவனை சிந்தைசெய்வோமாக. தண் மதியையும், கொடிய பாம்பினையும் கங்கையுடன் கூட்டிச் சடையில் தரித்த பெம்மானவன். கனல் போன்ற திருமேனியன், காட்டுமானைப்பிடித்துக் கையில் வைத்திருப்பவன், வேதங்களை உடையவனிவன்,

**பண்டங் கருத்ததோர் கையுடை**
**யான் படைத் தான்றலையை**
**உண்டங் கறுத்தது மூரொடு**
**நாடவை தானறியும்**
*கண்டங் கறுத்த மிடறுடை*
*யான் கண்டி யூரிருந்த*
*தொண்டர் பிரானைக்கண் டீரண்ட*
*வாணர் தொழுகின்றதே.*

**பொருள்.** *படைப்புத் தொழிலைச் செய்கின்ற பிரமனது தலையை, முன் ஒரு சமயம் இவனருத்ததை உலகமறியும். கறுத்த கழுத்தையுடைய இவ்விறைவனை வானவர் வந்து தொழுகின்றனர்.*



முடியின்முற்ருத தொன்றில்லையெல்
லாமுடன் ருனுடையான்
கொடியு முற்றவ்விடை யேறியொர்
கூற்ருெரு பாலுடையான்
கடிய முற்றவ்வினை நோய்களை
வான் கண்டியூரிருந்தான்
அடியு முற்ருர் தொண்ட ரில்லைகண்
டீரண்ட வானவரே.

பொருள். தனது திருமுடியே எல்லாப் பொருள்களது முடிவுமாய்க் கொண்டவன், இடபவாஹனன், உரிமையாளைப் பாதியாகக் கொண்டவன், பிறவிக்குக் காரணமாக உள்ள வினையைப் போக்கவல்லவன், இதனைத் தொண்டர்கள் உணர்ந்து திருவடிப் பற்றிக்கொண்டுள்ளனர். எனினும், தேவர்கள் பற்றிக்கொள்ளாதுபோயினர்.

பற்றியொ ராஜனயு ரித்தபி
ரான்பவ ளத்திரள்போல்
முற்றும ணிந்ததொர் நீறுடை
யான்முன்ன மேகொடுத்த
கற்றங் குடையவன் ருனறி
யான் கண்டி யூரிருந்த
குற்றமில் வேதமுடையானை
யாமண்டர் கூறுவதே.

பொருள். யானையின் தோலை உரித்தவன்; பவளம்போல் வெண்ணீறு பூசிய தோற்றத்தான்; கற்றங்குடையான், மாசற்ற வேதங்களை உடையவன்; எம் கண்டியூரெம் பெருமான்; அவனைத் தேவர்கள் போற்றுகின்றனர்.

போர்ப்பனை யானையு ரித்தபி
ரான் பொறி வாயரவம்
சேர்ப்பது வானத் திரைகடல்
சூழுல கம்மிதனைக்
காப்பது காரண மாகக்கொண்
டான் கண்டி யூரிருந்த
கூர்ப்புடை யொள்வாள் மழுவனை
யாமண்டர் கூறுவதே.

**பொருள்.** போரில் வல்ல யானையை உரித்தவன், புள்ளிப் பாம்பை யணிந்து மண்ணுலகைக் காக்கக் கண்டியூரமர்ந்தவன், கூர்மையுடையதும், ஒலிமிக்கதுமான மழுவைக் கையிலுடையவன் நம் கண்டியூருறை ஈசன். அவனை வானவர் வாழ்த்துகின்றனர்.



அட்டது காலனை யாய்ந்தது
வேதமா றங்க மன்று
சுட்டது காமனைக் கண்ணத
லலே தொடர்ந்தெரியக்
கட்டவை மூன்றுமெரித்தபி
ரான் கண்டியூரிருந்த
குட்டமுன் வேதப்படையனை
யாமண்டர் கூறுவதே.

**பொருள்.** கண்டியூரீசன் இயமனை உதைத்துருட்டியவன்; நான்கு வேதங்களையும், ஆறங்கங்களையு மாராய்ந்தவன்; மன்மதனை எரித்தவன்; முப்புரமெரித்தவன்; வேதங்களை படையாகக் கொண்டவன்; தேவர்கள் அவன் புகழ்பாடுகின்றனர்.

அட்டு மொலிநீ ரணிமதி
யும்மல ரான வெல்லாம்
இட்டுப் பொதியுஞ் சடைமுடி
யானண்டை மாலை யங்கைக்
கட்டு மரவது தானுடை
யான்கண்டி யூரிருந்த
கொட்டும் பறையுடைக் கூத்தனை
யாமண்டர் கூறுவதே.

பொருள். கண்டியூரீசன், ஒரு கூத்தன், தலையில் கங்கை, மதி, கொன்றைமலர் சூடியவன்; இண்டைமாலை போன்ற அரவத்தை அணிந்தவன்; கொட்டும்பறைகளை யுடையவன். அவனைத் தேவர்கள் புகழ்கின்றனர்.

மாய்ந்தன தீவினை மங்கின
நோய்கண் மறுகிவிழத்
தேய்ந்தன பாவஞ் செறுக்ககில்
லா நம்மைச் செற்றநங்கைக்
காய்ந்தபிரான் கண்டியூரெம்
பிரானங்க மாறினையும்
ஆய்ந்தபி ரானல்ல னேவடி
யேனையாட் கொண்டவனே.

பொருள். தீவினை ஒழிந்தன; நோய்கள் அகன்றன; பாவங்கள் தொலைந்தன. வேதாங்கங்கள் ஆறையுமாராய்ந்தவன்; அவன் கண்டியூரமர்ந்து என்னையுமாளாக்கிக் கொண்டான்.

மண்டி மலையை யெடுத்துமத்
தாக்கியவ் வாசுகியைத்
தண்டி யமரர் கடைந்த
கடல்விடங் கண்டருளி
உண்டபிரானஞ் சொளித்தபி
ரானஞ்சி யோடி நண்ணாக்
கண்டபி ரானல்லனோ கண்டி
யூரண்ட வானவனே

**பொருள்.** பாற்கடலைக் கடைந்தபொழுது வெளிவந்த விஷத்தைப் பருகி அதனைக்கழுத்தில் மறைத்துவைத்தவன்; நஞ்சு கண்டு ஓடிய தேவர்களுக்கு அபயமளித்தவன்; வானவர் தலைவணங்கிய அவனே கண்டியூரில் எழுந்தருளியுள்ளான்.

## திருநாவுக்கரசு சுவாமிகள் திருத்தாண்டகம் (பொது)

(6வது திருமுறை)

தண்டி குண்டோதரன் பிங்கிருடி
சார்ந்த புகழ்நந்தி சங்குகன்னன்
பண்டை யுலகம் படைத்தான்றானும்
பாரையளந்தான் பல்லாண்டிசைப்பத்
திண்டி வயிற்றுச் சிறுகட்பூதஞ்
சிலபாடச் செங்கண்விடையொன்றூர்வான்
**கண்டியூர் கண்டியூரேன்** பீராகிற்
கடுகநும் வல்வினையைக் கழற்றலாமே.



திருநாவுக்கரசு சுவாமிகள்.

(அடைவுத்திருத்தாண்டகம்)

(6-ந் திருமுறை)

---

# அட்ட வீரட்டத்தலங்கள்

(1) காவிரியின் கரைக்கண்டி வீரட்டானங் (2) கடலூர் வீரட்டானங் (3) காமருசீரதிகை மேவிய வீரட்டானம் (4) வழுவை வீரட்டானம் (5) வியன் பறியல் வீரட்டம் விடையூர் திக்கிடமாம் (6) கோவனகர் வீரட்டங் (7) குறுக்கை வீரட்டானம் (8) கோத்திட்டைகுடி வீரட்டானமிவை கூறி, நாவினவின்றுரைப்பார்க்கு நணுகச்சென்ருனமன்ற மருஞ் சிவன்றமரென்ற கல்வர்நன்கே.

## பெரிய புராணம்.

1 அங்கப் பதிநின் றெழுந்தருளி
அணிதிரு வாலம்பொழில் வணங்கிப்
பொங்கு புனற் பொன்னிப்பூந்துருத்திப்
பொய்யிலியாரைப் பணிந்து போற்றி
எங்கும் நிகழ்திருத் தொண்டர்குழாம்
எதிர்கொள்ள எப்பதியுந்தொழுது
செங்கயல் பாய்வயல் ஓடைசூழ்ந்த
**திருக்கண்டியூர் தொழச் சென்றணைந்தார்.**

2 கண்டியூர் விரட்டர் கோயிலெய்திக்
கலந்தடியாருடன் காதல்பொங்கக்
கொண்ட விருப்புடன் தாழ்ந்திறைஞ்சிக்
குலவு மகிழ்ச்சியின் கொள்கையினால்
தொண்டர் குழாத்தினை நோக்கி நின்று
தொடுத்த **இசைத்தமிழ்மாலை** தன்னில்
அண்டர் பிரான்றன் அருளின் வண்ணம்
அடியார் பெருமையிற் கேட்டருளி.

3 **வினவி எடுத்த திருப்பதிகம்**
மேவு திருக்கடைக்காப்பு தன்னில்
அனைய நினைவரி யோன் செயலை
அடியாரைக் கேட்டு மகிழ்ந்த தன்மை
புனைவறு பாடலிற் போற்றி செய்து
போந்து புகலிக் கவுணியனார்
துணை புனற்பொன்னித்திரை வலங்கொள்
சோற்றுத்துறை தொழச் சென்றடைவார்.

திருச்சிற்றம்பலம்,

## திருநாவுக்கரசுநாயனர் புராணம்.

(திருநின்ற சருக்கம்)

பாடல் எண் 1566.

"பொங்குபுனலார் பொன்னியினி லிரண்டு கரையும்
பொருவிடையார்
தங்குமிடங்கள் புக்கிறைஞ்சித் தமிழ்மாலைகளுஞ் சாத்திப்போ
யெங்கு நிறைந்த புகழாள ரீறிறெண்ட ரெதிர்கொள்ளச்
செங்கண் விடையார் திருவானைக் காவின் மருங்கு
சென்றணைந்தார்."

(பழையாறை வடதளியில் இறைவனை வழிபட்டு திருநாவுக்கரசநாயனர் காவிரியின் இரு கரைகளிலும் உள்ள திருவேதிகுடி, திருக்கண்டியூர், திருவாலம்பொழில், திருக்கானூர் மேலைத்திருக்காட்டுப்பள்ளி, திருஅன்பிலாலந்துறை முதலிய சிவத்தலங்களை வணங்கிப் பதிகம் பாடிவிட்டு திருவானைக்காவை அடைந்தார்.)

### சிவக்ஷேத்ரக் கலிவெண்பா.

"எழில் சேர்ந்த
கண்டியூர் வாழ்மங்களநா யகிபுணரும்
இண்டைச் சடைவீரட் டேசனே"

உமாபதி சிவாச்சாரியர்—(77வது கண்ணி)

(வெண்பா)

கண்டியூர்பற்றிய

### பொய்யாமொழிப்புலவர்—தனிப்பாடல்.

அன்று நீ செல்லக்கிடவென்ருயா யிழையோ
டின்று நீ வானுலகமேறினய்—மன்றல் கமழ்
மானெக்கும் வேல்விழியார் மாரனே கண்டியூர்
சீனக்கா செல்லக்கிட.

## ஸப்தஸ்தான க்ஷேத்ரங்களும், ஸப்த ரிஷிகளும்.

1 சோதிகண்டியூர் துருத்தி சோற்றுத்துறை பழனம்
வேதி நெய்த்தலம் திருவையாறேழிவை மேலும்
ஆதிகாசிபன் கௌதமன் அங்கிராக்குற்சன் காதலத்திரி
பிருகுவார் வசிட்டனைக்கண்டு

(பஞ்சநதிப்புராணம்—குறுமுனிச்சருக்கம்)

2 நெய்த்தானம் பூந்துருத்தி நேர்கண்டி வேதிகுடி
துய்த்தார்சேர் சோற்றுத்துறை பழனம்—மெய்த்த
மானதிருவையா றதனோடெழுதலங்கள்
மானதிருமத்தன்மனை.

## அட்ட வீரட்டத்தலங்கள்.

(1) பூமன் சிரங்கண்டி (2) அந்தகன் கோவில் (3) மதிகை (4) மாமன் பறியல் (5) சலந்தரன் விற்குடி மாவழுவூர் (7) காமன் குறுக்கை (8) எமன் கடவூர், இ காசினியிற் றேமன்னு கொன்றையுந் திங்களுஞ் சூடி சேவகமே.

## விபரம்.

(1) திருக்கண்டியூர்—பிரமன் சிரங்கொய்தது.
(2) திருக்கோவலூர்—அந்தகாசுரனை ஸம்ஹரித்தது
(3) திருஅதிகை—திரிபுரத்தை எரித்தது.
(4) திருப்பறியலூர்—தக்கன் சிரங்கொய்தது.
(5) திருவிற்குடி—சலந்தராசுரனை ஸம்ஹரித்தது
(6) வழுவூர்—யானையை உரித்தது (வைப்புத்தலம்
(7) திருக்குறுக்கை—காமனை எரித்தது.
(8) திருக்கடவூர்—யமனை உதைத்தது.

## சூரியன் பூஜித்த திருத்தலங்களுள் சில.

(1) திருக்கண்டியூர்

(2) குடந்தைக் கீழ்க்கோட்டம்

(3) திருத்தெளிச்சேரி

(4) திருநெல்லிக்கா

(5) புறவார் பனங்காட்டூர்

(6) திருவேதிகுடி

(7) திருப்பரிதிநியமம்

(8) மாசி 13, 14, 15ல் கண்டியூரில் சூரிய பூஜை.

---

## பிரமன் ஸன்னிதியுள்ள திருத்தலங்கள்.

(1) திருக்கண்டியூர்

(2) பாண்டிக்கொடுமுடி

(3) திருக்குடந்தை

---

## சதாநந்தர் பூஜித்த மற்றோர் தலம்.

திருச்சுழியல்—

## திருப்புகழ்.

### வேலுமயிலுந் துணே.

மருவு லாவிடு மோதி குலைப்பவர்
சமர வேலெனு நீடு விழிச்சியர்
மனதி லேகப டூரு பரத்தையர் ரதிகேள்வர்

மதன னேடுறழ் பூச லிடைச்சிய
ரிளைஞ ராருயிர் வாழு முலைச்சியர்
மதுர மாமொழி பேசு குணத்தியர் தெருமீதே

சருவி யாரையும் வாவெ னழைப்பவர்
பொருளி லேவெகு ஆசை பரப்பிகள்
சகல தோதக மாயை படிப்பரை யணுகாதே

சலச மேவிய பாத நினைத்துமு
னருணை நாடதி லோது திருப்புகழ்
தணிய வோகயி லோத வெனக்கருள் புரிவாயே

அரிய கானக மேவு குறத்தித
னிதணி லேசில நாளு மனத்திட
னடவி தோறுமெ வாழியல் பத்தினி மணவாளா

அசுரர் வீடுகள் நூறு பொடிப்பட
உழவர் சாகர மோடி யொளித்திட
அமரர் நாடுபொன் மாரி மிகுத்திட நினைவேனே

திருவின் மாமர மார்பழ னப்பதி
அயிலு சோறவை யாளு துறைப்பதி
திசையினான்மறை தேடிய முற்கொடி விதியாதிச்

சிரமு மாநிலம் வீழ்தரு மெய்ப்பதி
பதும நாயகன் வாழ்பதி நெய்ப்பதி
திருவை யாறுட னேழு திருப்பதி பெருமாளே.

(ஸ்ரீ அருணகிரியார்)

(நால்வர் துதி.)

பூழியர் கோன் வெப்பு ஒழித்த
புகலியர் கோன் கழல் போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பில்
அணைந்த பிரான் அடிபோற்றி
வாழி திருநாவலூர் வன்றொண்டர்
பதம் போற்றி, ஊழிமலி திருவாத
வூரர் திருத்தாள் போற்றி.

வெற்றிவேற் பதிப்பகம், தெற்கலங்கம், தஞ்சாவூர்.